2002 ஏப்ரல் 5]

கொண்டு வருவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்கிற அந்த விதியைத் தளர்த்த வேண்டிய நிலையிலே இந்த அரசு இப்போது இல்லை. அந்த விதி ஏற்கெனவே தளர்த்தப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கோரிக்கைகள் வருகின்றபோது, அந்தக் கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஆய்ந்து இந்த அரசுக்குப் பரிந்துரை செய்தால், அதைத் தருகிற வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எம். சீனிவேல்.

திரு. எஸ்.எம். சீனிவேல்: அம்மாவை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதி 3 இலட்சத்து 80 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட தொகுதி. திருப்பரங்குன்றத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

வினா எண் 102, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

102—

விதைகள்

***4056—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை மூலம் வழங்கப்படும் மணிலா, உளுந்து, பச்சைப்பயறு விதைகள் உரிய நேரத்தில் வழங்கப்படாததால், விவசாயம் பாதிக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவற்றை உரிய காலத்தில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மணிலா, உளுந்து, பச்சைப்பயறு விதைகள் தக்க பருவத்தில் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு காலகட்டங்களிலே, காலத்தைக் கடந்து, அந்தப் பருவத்திலே வழங்கப்படாமல், அதுவும் நிலக்கடலை, உளுந்து, பச்சைப்பயறு போன்ற மேட்டுத் தாவரப் பயிர்களுக்கான விதைகளையெல்லாம் காலம் கடந்து கொடுப்பதனால், அது சரியாக விவசாயிகளுக்குச் சென்றடையாமல், அதனுடைய பலனை முழுமையாக விவசாயிகள் அனுபவிக்க முடியாமல் இருக்கிறது. இதனால் ஏழையெளிய விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதனை அரசு க்ருணையோடு கூர்மையாக பரிசீலிக்குமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து நல்ல கருத்து. அப்படி ஏதாவது நடந்திருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால், அதற்குரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 103, திரு. அ. நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

103—

வேளாண் விற்பனைக் குழு அலுவலகம்

***10997—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் வேளாண் விற்பனைக் குழு அலுவலகத்தை மங்கநல்லூரில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?